Arima Nokku

# அரிமா நோக்கு

8 : 4 சனவரி 2015

ரூ.30

ISSN 2320-4842

ஆசிரியர் : ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

# அரிமா நோக்கு

8 : 4 சனவரி 2015

போர்கள்
- வ. ஜெயதேவன் 03

மொழித் தொழில்நுட்பம்
- கோ. பழனிராஜன்ம் 04

வள்ளுவர் காட்டும் வஞ்சகர்
- ஆ. ஏகாம்பரம் 09

புலம்பெயர்ந்த தமிழரும் செம்மொழிக் கல்வியும்
- கா. செல்லப்பன் 12

திருவள்ளுவர் உணர்த்தும் ஆளுமைச் சிந்தனைகள்
-இரா. மோகன் 15

தமிழ்ச் செவ்விலக்கியங்களில் பௌத்த வழக்காறுகள்
- சு. மாதவன் 18

காப்பியமும் நாடும்
- ஏ. மார்கிரேட் மேரி 25

நன்னூல் உரை மரபு
- பா. மதுகேஸ்வரன் 27

பாசனின் நாடகங்களும் பழந்தமிழ்ப் பனுவல்களும்
- ப. மருதநாயகம் 29

சங்க இலக்கியத்தில் கோழி பற்றிய வரலாற்றுக் குறிப்புகள்
- கோ. சதீஷ் 39

Linguistic Variation in Vanniyar Speech
- *P. Shankar Ganesh* 46

தொல்காப்பியம் காட்டும் திணைநிலைப் பாகுபாடும் சங்க இலக்கியப் பாகுபாடும்
- க. பாலசுப்பிரமணியன் 50

Manimekalai
- *M. D. Raghavan* 57

இலக்கிய முழுமையை நோக்கி தலித் இலக்கியம்
- கி. நாச்சிமுத்து 61

ISSN 2320-4842

## தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## ஒபாமா உபதேசமாலை

மதச் சமன்மை பேணுவதில் இந்தியா அக்கறையோடு செயல்பட வேண்டுமென அண்மையில் இந்தியக் குடியரசுநாள் சிறப்பு விருந்தினராக வந்திருந்த அமெரிக்க அதிபர் ஒபாமா சொல்லிவிட்டுச் சென்றுள்ளார்.

இந்தியாவின் புதிய அரசு அந்நிய முதலீட்டுக்குக் கதவுகளை அகலமாகத் திறந்துவைத்துள்ளது. நம் நாட்டு மூலதனத்தால், தொழில்நுட்பத்தால், தொழில் வளர்ச்சியால் நாடு மேம்பாடு அடைய வாய்ப்புகள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கண்டறிந்துவிட்ட காரணத்தால், நம் நாட்டில் மூலதனம் போட்டு அந்நிய நாடுகள் தொழில் செய்தால் நம் நாடு மேம்பாடு அடையும் என்று முடிவு கட்டப்பட்டுள்ளது.

இந்தியாவில் மூலதனம் போட்டுத் தொழில்கள் தொடங்கினால் அந்நிய நாடுகள் கொழுக்க முழுக்கமுழுக்க வாய்ப்புகள் உண்டென்று எள்ளளவு நாடு முதல் எல்லா நாடுகளுக்கும் அழைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

அந்நிய முதலீடு என்பதற்கும் அந்நிய ஆட்சி என்பற்கும் வடிவ அமைப்பில் வேறுபாடு உண்டென்றாலும் அடிப்படைப் பொதுக் குணக் கூறுகளில் மிகுந்த வேறுபாடு கிடையாது. உலகப் போர்கள் கற்றுக் கொடுத்த பாடம்-படையெடுத்து ஒரு நாட்டைக் கைப் பற்றுவதைவிடப் பணம் கொடுத்து ஒரு நாட்டைக் கைப்பற்றுவது எளிது என்பதுதான். மற்றும் மக்களை நேரடியாக அடிமைப் படுத்துவதைவிட அவர்களின் மொழியை, பண்பாட்டை, கலை, நாகரிகத்தைச் சிதைத்து அடிமைப்படுத்தித் தமது குடியேற்ற நாடாக மாற்றிக்கொள்வது எளிது என்பதும்தான்.

சுரண்டுவதற்கோ அதற்கெனத் தொழில் முதலீடு செய்வற்கோ ஏற்ற நிலை உருவாகுமாறு அடிமைப்படுத்தப்பட வேண்டிய நாட்டை அடிமைப்படுத்தும் நாடு கண்காணித்துக் கட்டமைத்துக் கொள்ளும். பெரும் முதலீடு விதைக்கப்பட்டு ஆதாயம் நிலையாய்க் கொட்டிக் குவிக்க வேண்டுமெனில், கட்டுக்குலையாத அரசு சமூக அமைப்பு ஆகியன அதற்கு ஆதரவான வகையில் தேவை. நிரந்தரமின்மையில் நீந்திக்கொண்டிருக்கும் நாட்டில் யாரும் தூண்டில் போட மாட்டார்கள்.

எனவேதான் ஒபாமா மத ஒற்றுமை உபதேசத்தை ஓதியிருக்கிறார். ஒற்றுமை இன்மை ஒரு நாட்டைக் கைப்பற்ற உதவும்; ஒற்றுமை உடைமை அச்சமின்றி ஒரு நாட்டைத் தந்திரமாகச் சுரண்ட உதவும்.

ISSN 2320-4842

ஒபாமா உபதேச மாலையை முற்றிலும் ஒதியும் ஒதாத நிலையில் இந்தியத் தலைநகரில் கிறித்தவக் கோயில்கள் தகர்க்கப்பட்டுள்ளன. கையோங்கிய மதவாதக் கும்பல்களால் மதமாற்றங்கள் நடந்துவருகின்றன. கண்டும் காணாத நிலையில் நடுவண் அரசு தூய்மைவாதத்தைத் துடைப்பம் ஏந்திப் பரப்ப வாய் ஓயாமல் பேசுகிறது.


*ஆசிரியர்*

ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*

*(மதிப்புறு நிலை)*

வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*

சிலம்பொலி சு. செல்லப்பன்

கா. செல்லப்பன்

இரா. இளவரசு

நா. கணேசன் (அமெரிக்கா)

நா. சுப்பிரமணியன் (கனடா)

பொன். செல்வகணபதி

நா. முத்துக்குமார்

சீதாலட்சுமி (சிங்கப்பூர்)

மு. பரமசிவம் (மலேசியா)

பத்மாவதி விவேகானந்தன்

இரா. பிரேமா

பா. இரவிக்குமார்

மருதூர் அரங்கராசன்

பெ. இலக்குமிநாராயணன்

எஸ். ஏ. சங்கரநாராயணன்

*அறிவுரைக் குழு*

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாளர்*

இரா. பன்னிருகைவடிவேலன்


## கட்டண விவரம்

| | | | |
|---|---|---|---|
| வாழ்நாள் கட்டணம் | ரூ. | 3000/- | US $ 150 |
| புரவலர் கட்டணம் | ரூ. | 5000/- | US $ 200 |
| நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. | 10,000/- | US $ 500 |

- நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் உண்டு.
- புரவலர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 40% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

**விளம்பரக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 15,000 |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 10,000 |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 3,000 |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 1,500 |

*தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.*

**கட்டணம் செலுத்த:**

**DD in favour of '*Nokku*' payable at Chennai**

**Indian Overseas Bank (IFSC Code: IOBA0001681)**

**S.B. A/c No. 16810100006423**


## அரிமா நோக்கு

4/1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை

கொட்டிவாக்கம், சென்னை 600 096

வலைத்தளம்: www. arimaanokku.com

மின் அஞ்சல்: nokku2007@gmail.com செல்: 9380626448